**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை - **திரு T. சோழவேந்தன்., B.A.B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
-------

2023-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 01-ம் நாள் செவ்வாய்க்கிழமை
------

**இடைமனு எண். 02/2023 -ல் அசல் வழக்கு எண்.21/2016**

1. சின்னதுரை
2. பூங்கோதை
3. செந்தில்குமார் ..மனுதார்கள்/வாதிகள்

...எதிர்...

1. சுரேஷ்
2. கணேசன் ..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 25.07.2023 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாராகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.சுந்தரய்யா அவர்களும், எதிர்மனுதாராகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஏ.ராம்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வா.சா.1-ஆன 1-ம் மனுதாரரை விசாரணை செய்து முடிக்கப்பட்டுள்ள நிலையில் வா.சா.1ஆன 1-ம் மனுதாரரை மீண்டும் விசாரணை செய்து அவர் மூலமாக சில முக்கிய ஆவணங்களை குறியீடு செய்ய வேண்யுள்ளதால் இந்த வழக்கின் 1-ம் வாதியான வா.சா.1-யை (Re-call) செய்ய அனுமதி கோரி மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனு உ.வி.மு.ச. கட்டளை-18, விதி-17 -ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுவின் சுருக்கம்**

மனுதாரர் இம்மனுவின் 1-ம் மனுதாரர் மற்றும் அசல் வழக்கில் 1-ம் வாதி. 2, 3 மனுதாரர்களுக்காவும் இந்த மனுவினை 1-ம் மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்கள்/வாதிகள்,

எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரர்கள் தரப்பு விசாரணை நடந்துகொண்டு வருகிறது. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் சில முக்கிய ஆவணங்கள் தற்போது தான் கிடைத்துள்ளது. அந்த ஆவணங்களை வேண்டுமென்றோ, அலட்சியமாகவே முன்பே தாக்கல்ட செய்யாமலிருக்கவில்லை. மேற்படி ஆவணம் உரிய காலத்தில் கொடுக்காத கால தாமதத்தை மன்னித்து அதை ஏற்றுக்கொள்ள வேண்டிய நியாயமாக உள்ளது. இல்லாவிடில் மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஏராள நஷ்டமும், கஷ்டமும் ஏற்படக்கூடும். எனவே மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வா.சா.1-ஆன 1-ம் மனுதாரரை விசாரணை செய்து முடிக்கப்பட்டுள்ள நிலையில் வா.சா.1 ஆன 1-ம் மனுதாரரை மீண்டும் விசாரணை செய்து அவர் மூலமாக சில முக்கிய ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்யுள்ளதால் இந்த வழக்கின் 1-ம் வாதியான வா.சா.1-யை (Re-call) செய்ய அனுமதி கோரி மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யத இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

**2. <u>1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையை 2-ம் எதிர்மனுதாரர் தன்னுடையதாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கும்.</u>**

மனு சட்டப்படியும், நியாயப்படியும் சரியல்ல. மனுவினை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது. இந்த எதிருரையில் சொல்லியுள்ள விபரங்களை தவிர வேறு சங்கதிகள் 1-ம் எதிர்மனுதாரர் வன்மையா மறுக்கிறார். மனுதாரர்கள் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் யாவும் கற்பனையானது மற்றும் பொய்யான சங்கதிகளாகும் அவற்றை மனுதாரர்கள் நிரூபிக்க கடமைபட்டவர்கள். இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்படும் வாரிசு சான்றை குறித்து ஏற்கனவே இவ்வழக்கின் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1ஆன சின்னதுரையிடம் பிரதவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையில் கேட்கப்பட்டபோது வாரிசு சான்றை தாக்கல் செய்யவில்லை என கூறிவிட்டு குறுக்கு விசாரணையில் கூறிய சாட்சிகள் விவரமாக தற்போது இந்த வாரிசு சான்றானது வாதிகள் தரப்பில் உள்நோக்கத்துடன் தாக்கல் செய்யப்படுகிறது. மேலும் இந்த ஆவணம் வா.சா.1-ன் குறுக்கு விசாரணையில் உள்ள குறைபாட்டை சரிசெய்வதற்காகவே இந்த வாரிசு சான்று தாக்கல் செய்யப்படுகிறது. அவ்வாறு குறுக்கு விசாரணைக்கு விரோதமாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனு தூய கரத்துடன் தாக்கல் செய்யப்படவில்லை. ஏனெனில் இவ்வழக்கின் வா.சா.1 ஆன சின்னதுரை ஒரு ஓய்வு பெற்ற ஆசிரியர் அவருக்கு இவ்வழக்கின் தன்மை மற்றும் வழக்னின் நிலை நன்கு தெரியும். எனவே மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

3. **இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை**

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. **தீர்வு**

மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர் இம்மனுவின் 1-ம் மனுதாரர் மற்றும் அசல் வழக்கில் 1-ம் வாதி என்றும், 2, 3 மனுதாரர்களுக்காவும் இந்த மனுவினை 1-ம் மனுதாரர் தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர்கள்/வாதிகள், எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மனுதாரர்கள் தரப்பு விசாரணை நடந்துகொண்டு வருகிறது என்றும், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் சில முக்கிய ஆவணங்கள் தற்போது தான் கிடைத்துள்ளது என்றும், அந்த ஆவணங்களை வேண்டுமென்றோ, அலட்சியமாகவே முன்பே தாக்கல் செய்யாமலிருக்கவில்லை என்றும், மேற்படி ஆவணம் உரிய காலத்தில் கொடுக்காத கால தாமதத்தை மன்னித்து அதை ஏற்றுக்கொள்ள வேண்டிய நியாயமாக உள்ளது என்றும், இல்லாவிடில் மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஏராள நஷ்டமும், கஷ்டமும் ஏற்படக்கூடும் என்றும், எனவே மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வா.சா.1-ஆன 1-ம் மனுதாரரை விசாரணை செய்து முடிக்கப்பட்டுள்ள நிலையில் வா.சா.1 ஆன 1-ம் மனுதாரரை மீண்டும் விசாரணை செய்து அவர் மூலமாக சில முக்கிய ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்யுள்ளதால் இந்த வழக்கின் 1-ம் வாதியான வா.சா.1-யை (Re-call) செய்ய அனுமதி கோரி மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யத இம்மனுவினை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

6. எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர்கள் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் யாவும் கற்பனையானது மற்றும் பொய்யான சங்கதிகளாகும் அவற்றை மனுதாரர்கள் நிரூபிக்க கடமைபட்டவர்கள் என்றும், இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்படும் வாரிசு சான்றை குறித்து ஏற்கனவே இவ்வழக்கின் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1ஆன சின்னதுரையிடம் பிரதவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையில் கேட்கப்பட்டபோது வாரிசு சான்றை தாக்கல் செய்யவில்லை என கூறிவிட்டு குறுக்கு விசாரணையில் கூறிய சாட்சிகள் விவரமாக தற்போது இந்த வாரிசு சான்றானது வாதிகள் தரப்பில் உள்நோக்கத்துடன் தாக்கல் செய்யப்படுகிறது என்றும், மேலும் இந்த ஆவணம் வா.சா.1-ன் குறுக்கு விசாரணையில் உள்ள குறைபாட்டை சரிசெய்வதற்காகவே இந்த வாரிசு சான்று தாக்கல்

செய்யப்படுகிறது என்றும், அவ்வாறு குறுக்கு விசாரணைக்கு விரோதமாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனு துூய கரத்துடன் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், ஏனெனில் இவ்வழக்கின் வா.சா.1 ஆன சின்னதுரை ஒரு ஒய்வு பெற்ற ஆசிரியர் அவருக்கு இவ்வழக்கின் தன்மை மற்றும் வழக்னின் நிலை நன்கு தெரியும் என்றும், எனவே மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

7. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கின் கோப்புகளை பரிசீலனை செய்ததில் அசல் வழக்கை மனுதாரர்கள்/வாதிக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இம்மனுவானது அசல் வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பு குறுக்கு விசாரணையாது 21.03.2023 அன்று நிறைவுற்ற நிலையில், மனுதாரர்கள் தரப்பில் தற்போது சில முக்கிய ஆவணங்கள் குறியீடு செய்ய மனு தாக்கல் செய்து கோரிய நிலையில், எதிர்மனுதார்கள் தரப்பில், வாதி தரப்பு சாட்சியான வா.சா.1 ஆன சின்னதுரையிடம் பிரதவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையில் வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை என கூறிவிட்டு தற்போது மனுதாரர்கள் தரப்பில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதனால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்பட போவதில்லை. இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதாலும் இந்த வழக்கில் இரு தரப்பையும் கேட்டு வழக்கை தகுதியின் அடிப்படையில் முடிவு செய்வதுதான் இயற்கை நீதியின் நலனுக்கும் உகந்ததாக இருக்கும் என்று கருதி மனுதாரர்களுக்கு ஒரு வாயப்பு அளிக்கும் விதமாக இம்மனுவை கீழ்கண்ட நிபந்தனையுடன் அனுமதிக்கலாம் என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக மனுதாரா் எதிா்மனுதாரருக்கு செலவுத்தொகையாக ரூ.500/-யை 09.08.2023-ம் தேதிக்குள் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இம்மனு அனுமதிப்பட்டு உத்தரவிடப்படுகிறது. தவறும் பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடியாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 10.08.2023.

இந்த உத்தரவு என்னால் தட்டருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 01-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்/- T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

<u>பின் இணைப்பு</u>

| | |
|---|---|
| <u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u> | - இல்லை- |
| <u>மனுதாரர்கள் தரப்பு சான்றாணங்கள்</u> | - இல்லை- |
| <u>எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள்</u> | -இல்லை- |
| <u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> | - இல்லை- |

(ஓம்/- T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடைமனு எண். 02/2023-ல்
அசல் வழக்கு எண். 21/2016
நாள் - 01.08.2023.